விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்–02.45 p.m.
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் –03.45 p.m.

**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.I, Mettur**
**Case No : C.C. 350/2023**

**Prosecution witness : ம.சா.1** **Date : 22.08.2024**

| | |
|---|---|
| **Name : மகேந்திரன்** | **Taluk : மேட்டூர்** |
| **Father Name : ராமசாமி** | **Calling : விவசாயம்** |
| **Village : கொளத்தூர்** | **Age : 55** |

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

தான் தாக்கல் செய்த வருமான வரி கணக்கில் யாரிடம் கொடுத்த தொகைக்காக ரூ.2,40,000/– வட்டி வருகிறது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 2021 – 2022 வருமான வரி கணக்கில் என் அண்ணன் மாதேஷ்–யிடமிருந்து ரூ.2,50,000/– வர வேண்டு என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். 2021 –2022 மற்றும் 2022 – 2023 இரண்டு வருமான வரி கணக்கில் என்னுடைய அசையா சொத்தில் 2.54 ஏக்கர் என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் பெயரில் உள்ளதை மட்டும் குறிப்பிட்டுள்ளேன். என் பெற்றோர் பெயரில் உள்ளதை குறிப்பிடவில்லை. விவசாய நிலம் சம்மந்தமான தகவல்கள் பொய் என்பதால் தான் குறுக்கு விசாரணையில் எனக்கு 25 ஏக்கர் நிலம் உள்ளது என்றும் பிறகு 5 ஏக்கர் நிலம் உள்ளது என்றும் தற்போது வருமான வரி கணக்கில் 2 ஏக்கர் 54 சென்ட் உள்ளது என்றும் மாற்றி மாற்றி முன்னுக்கு பின் முரணாக சாட்சி அளிப்பது மிகுந்த சந்தேகம்

அளிக்கிறது இந்த வழக்கில் என்றால் சரியல்ல. என் பெயரில் உள்ளது மட்டும் அப்பா எனக்கு ஒதுக்கிய நிலத்திற்கு பட்டா மாற்றம் செய்யப்படவில்லை அதனால் குறிப்பிடவில்லை. நான் சொல்லும் தகவல்கள் பொய் என்றால் சரியல்ல. 2021– 2022 தாக்கல் செய்த வருமான வரி கணக்கில் வங்கி இருப்பு எஸ்பிஐ வங்கி ரூ.9944/– , சேலம் மத்திய கூட்டுறவு வங்கியில் ரூ.22072/–, இண்டியன் வங்கியில் ரூ.28460/–, HDFC வங்கியில் ரூ.36357/– என காட்டியுள்ளேன் என்றால் சரிதான். 2022–2023 ம் ஆண்டு வங்கி இருப்பு கணக்கில் எஸ்பிஐ வங்கி ரூ.9944/–, சேலம் மத்திய கூட்டுறவு வங்கியில் ரூ.61476/–, இண்டியன் வங்கியில் ரூ.32445/–, HDFC வங்கியில் ரூ.36357/– என காட்டியுள்ளேன் என்றால் சரிதான். நான் குறுக்கு விசாரணையில் கேட்டபோது எனக்கு மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் இண்டியன் வங்கி மட்டும் தான் வங்கி கணக்கு வைத்துள்ளேன் என்றும் வேறு வங்கிகளில் வங்கி கணக்கு இல்லை என்றும் கூறிவிட்டு தற்போது வருமான வரி தாக்கல் கணக்கில் 4 வங்கிகளில் வங்கி கணக்கு வைத்துள்ளதாக சொல்லியுள்ளது பொய் என்றால் மீதமுள்ள வங்கிகளில் வரவு செலவு செய்வதில்லை inoperative account. என்னுடைய வருமான வரி கணக்கை பார்த்தலே போதிய வருமானம் இல்லை தெரியவருகிறது என்றால் விவசாயத்தின் மூலம் வருவாயை வைத்து கடன் கொடுத்தேன். மேற்படி 2 வருமான வரி கணக்கு தாக்கலில் 2022–2023 ம் ஆண்டு விவசாய வருமானம் ரூ.2 லட்சம் என்றும் 2021 – 2022 ம் ஆண்டு விவசாய வருமானம் ரூ.1,75,000/– என்றும் நான் கணக்கு காட்டியுள்ள நிலையில் காசோலை பெரிய தொகையை நான் விவசாய வருவாயை வைத்து கொடுப்பதற்கு எந்த வாய்ப்பில்லை என்றால் என் பெயரில்

உள்ள 2.54 ஏக்கர் நிலம் தான் கணக்கு காண்பித்துள்ளேன். எனது அப்பா பெயரில் உள்ள நிலத்தின் மூலம் வரும் வருமானத்தின் கணக்கை காண்பிக்கவில்லை. நான் வழக்கிற்காக பொய்யாக அவ்வாறு சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2021 – 2022 வருமான வரி கணக்கில் Closing balance ரூ.1597020/– காண்பித்து உள்ள நிலையில் அதற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனோ என்றால் எனது கணக்கீட்டாளாரை தான் கேட்க வேண்டும். நான் வங்கி மூலமாகவோ, தனி நபர் மூலமாகவோ வட்டிக்கு கடன் வாங்கிய நிலையில் நான் வட்டி இல்லாமல் எதிரிக்கு கடன் கொடுத்தாக சொல்வது ஏற்றுக்கொள்ள அல்ல என்றால் நான் தனி நபரிடம் எந்த கடனும் வாங்கவில்லை. நான் சொல்வது பொய் என்றும் 2022 –2023 வருமான வரி கணக்கில் மாதேஸ் இடம் ரூ.2,50,000/– பணம் வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் அவசர தேவைக்காக வாங்கியிருப்பேன் அதை நான் திருப்பி கொடுத்துவிட்டேன். ரூ.2,50,000/– யை கடன் வாங்கிய உள்ள நிலையில் அதிகப்படியான ரூ.19 லட்சம் எதிரிக்கு கடன் கொடுக்க வில்லை என்றால் அவசர தேவைக்காக வாங்குவேன் திருப்பி கொடுத்துவிடுவேன். இரண்டு ஆண்டு வருமான வரி கணக்கில் வருமானம் மற்றும் செலவு குறித்த தகவல்கள் அசையா சொத்து தகவல்கள் அனைத்தும் முன்னுக்கு முரணாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த வருமான வரி தாக்கல் கணக்கு Statement தற்போது வழக்கிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் வீட்டில் சிசிடிவி கேமரா வைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் எதிரியுடன் சேர்ந்து தொழில் செய்து வருகிறனோ என்றால் இல்லை. எதிரியுடன் ஒன்றாக படித்தேனா என்றால் இல்லை. நான் 10.02.2022

மற்றும் 23.05.2022 ல் கடன் கொடுத்த தொகைக்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. என்னிடம் எதிரி எப்போது கடன் கேட்டார் என்றால் பணம் கொடுப்பதற்கு 1 மாதத்திற்கு முன்பு கேட்டார். எங்கு வைத்து பணம் கேட்டார் என்றால் என் வீட்டில் வைத்து கேட்டார். எதிரி என்னிடம் பணம் கேட்ட தேதி என்ன என்றால் நியாபம் இல்லை. எதிரி என் உறவினர் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் அண்ணி வகையில் எதிரி சொந்தம் ஆகும். நான் எதிரிக்கு கடன் கொடுத்தேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரியிடம் நான் எப்போது பணத்தை திரும்ப கேட்டேன் என்றால் 2022 ஆண்டு 11ம் மாதம் தருவதாக சொல்லியிருந்தார். நான் 12 ம் மாதம் எதிரியிடம் கேட்டேன். இடைப்பட்ட காலத்தில் நான் எதிரியிடம் எப்போது பணம் தருவீர்கள் என்று கேட்டேனா என்றால் கேட்கவில்லை. நான் தாக்கல் புகாரிலும், பிரமாண பத்திரத்தில் கடன் கொடுத்ததாக கூறிய தேதிகளில் என்னிடம் பணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல என்னிடம் பணம் இருந்தது. நான் பெரிய தொகையை கடனாக கொடுக்கும் போது ஆவணம் எழுதி வாங்கியிருக்க வேண்டும் நான் ஆவணம் எழுதி வாங்கவில்லை என்று கூறும் போது வழக்கில் மிகுந்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என்றால் நம்பிக்கை பேரில் கொடுத்தேன். நான் எந்த வங்கியில் காசோலை தாக்கல் செய்தேன் என்றால் நானே கொளத்தூர் வங்கியில் தாக்கல் செய்தேன். அசல் காசோலையில் தேதி, தொகை ஒரு மையாலும் கையெழுத்து ஒரு மையாலும் உள்ளது என்றால் சரிதான். எதிரியின் மகன் எழுதிக்கொடுத்தார். எதிரி கையெழுத்து செய்து கொடுத்தார். எதிரி கையெழுத்து மட்டும் செய்து கொடுத்தார் என்றும் நானோ மற்ற விவரங்களை பூர்த்தி செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. நான்

சொல்வது பொய் என்றால் சரியல்ல. மாதேஸ் என் அண்ணன் அவருடன் சுமுகமான உறவில் தான் உள்ளேன் என்றால் சரிதான். என் அண்ணனுக்கு எதிரிக்கு நல்ல பழக்கம் என்றால் சரிதான். எதிரி என்னிடம் பணம் வாங்கவில்லை என்று அதற்கு ஆதரவாக காசோலை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 2021 பிப்ரவரி மாதத்தில் ரூ.10 லட்சம் எதிரி என் அண்ணனிடம் கடன் வாங்கி இருந்தார் என்றும் அந்த கடனுக்கு செக்ரியூட்டியாக வழக்கு காசோலை என் அண்ணனிடம் கொடுத்துள்ளார் எதிரி மேற்படி கடன் தொகை முழுவதையும் மாதேசிடம் கட்டிய பிறகு செக்ரியூட்டியாக கொடுத்த காசோலை தொலைந்துவிட்டது தேடிப்பார்த்து தருகிறேன் என்று கூறிவிட்டார். மேற்படி மாதேசன் பேச்சை நம்பி எதிரியும் அவர் மீது உள்ள நம்பிக்கையால் இந்த வழக்கு காசோலை சம்மந்தமாக அவர் மீது எந்த வித மேல் நடவடிக்கையும் எடுக்கவில்லை துர்லாபம் அடையவேண்டி நானும் என் அண்ணன் மாதேஸ் என் அண்ணனிடம் கொடுத்த செக்ரியூட்டியாக கொடுத்த கையொப்பம் மட்டும் செய்த நிரப்படாத காசோலையை நானே பூர்த்தி செய்துக்கொண்டு எதிரி மீது இந்த காசோலை வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யபடுவேண்டும் என்றால் சரியல்ல. வ.ச.ஆ.7 ல் 03.05.2022 ம் தேதி எதிரிக்கு ரூ.5 லட்சம் எதிரிக்கு கொடுத்துள்ளதாக உள்ளது என்றால் சரிதான். 23.05.2022 ல் தான் கொடுத்தேன்.

<u>விசாரணை முடிக்கப்பட்டது.</u>

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**